தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 19-12-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அடுத்த இரண்டு மாதங்களுக்கு தேங்காய் மற்றும் கொப்பரையின் விலைகள் நிலையாக இருக்கும்

உலகளவில் தென்னை பயிர் செய்யும் நாடுகளில் இந்தியா முக்கியமான ஒன்றாகும். இந்திய அரசின் வேளாண் அமைச்சகத்தின் முதல் கணக்கீட்டின் படி 2012-13ல் 2.13 மில்லியன் எக்டரில் தென்னை பயிரிடப்பட்டு 15.35 மில்லியன் டன்கள் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டது. கேரளா 35.92 சதம் பரப்பில் 25.89 சதம் உற்பத்தி செய்து முதல் இடத்தில் உள்ளது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு 21.81 சதம் பரப்பிலும் மற்றும் 31.02 சதம் உற்பத்தியிலும் பங்களிக்கிறது. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், தஞ்சாவூர், கன்னியாகுமரி, வேலூர், ஈரோடு, தேனி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் மதுரை ஆகியன தேங்காய் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்கள் ஆகும்.

தேங்காய் மற்றும் அதைச்சார்ந்த பொருட்களின் விலை தேங்காய் எண்ணெயின் விலையைப் பொறுத்து அமையும்.தேங்காய் எண்ணெயின் விலை கடந்த ஒரு மாதமாக அதிகரித்து வருகிறது. தமிழ்நாட்டில் மொத்த சந்தையில் வார இறுதியான நவம்பர் 24, 2013ல் தேங்காய் எண்ணெயின் விலை கிலோவிற்கு ரூபாய் 109 ஆக உள்ளது. இதன் விலை பாமாயில் இறக்குமதி அளவைப் பொறுத்து மாறுபடும். தேங்காய் எண்ணெயின் விலை உயர்விற்கு காரணம் இப்பருவத்தில் உற்பத்தி குறைந்துள்ளதே ஆகும். தற்சமயம் பொள்ளாச்சி சந்தையில் டன்னுக்கு ரூ.24,000, அதாவது பெரிய காய் (700 கிராம்) ஒன்றுக்கு ரூ.15 ம் மற்றும் சராசரி காய் (400 - 500 கிராம்) ஒன்றின் விலை ரூ 12 -13 ஆக உள்ளது. ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகாவிலிருந்து வரத்து குறைந்துள்ளதால் கேரளா மற்றும் தமிழ்நாட்டில் கொப்பரைக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கேரளாவில்

கொப்பரையின் விலை கிலோவிற்கு ரூ.83 ஆகவும் தமிழ்நாட்டில் கிலோவிற்கு ரூ.80 ஆகவும் உயர்ந்துள்ளது.

தற்சமயம் சபரிமலை யாத்திரை ஆரம்பித்த நிலையில் உள்ளதால் தேங்காயின் தேவை அதிகரித்துள்ளது. யாத்திரை ஜனவரி மாதம் இரண்டாம் வாரம் வரை நீடிக்கும். இது தேங்காய் மற்றும் கொப்பரையின் விலைகளை மேலும் அதிகரிக்க வழிவகுக்கும்.

இந்த சூழ்நிலையில் விவசாயிகள் டிசம்பர் மற்றும் ஜனவரி 2014ல் தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை எப்படி இருக்கும் எனத் தெரிந்து கொள்ள ஆர்வமாக உள்ளனர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது, விவசாயிகள் சரியான சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக சந்தை ஆய்வு மற்றும் சந்தை நிலவரம் மற்றும் பொருளாதார பகுப்பாய்வு அடிப்படையில் பொள்ளாச்சி மற்றும் அவல்பூந்துறை சந்தையில் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலைகளை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின்படி தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை பொள்ளாச்சி மற்றும் அவல்பூந்துறை சந்தையில் டிசம்பர் 2013 மற்றும் ஜனவரி 2014ல் தேங்காயின் பண்ணை விலை பொள்ளாச்சியில் ஒரு காய்க்கு ரூபாய் 15 முதல் 16 வரையும் மற்றும் ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள அவல்பூந்துறை மற்றும் இதர சந்தைகளிலும் கொப்பரைக்கு கிலோ ரூ.75 முதல் 82 வரையிலும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சிறந்த தரத்தின் காரணமாக பொள்ளாச்சி சந்தையில் தேங்காயின் விலை மற்ற சந்தைகளில் நிலவும் விலைகளை விட அதிகமாக இருக்கிறது. மேற்கண்ட விலை நிலவரங்களை அடிப்படையாகக் கொண்டு விவசாயிகள் தேங்காய் மற்றும் கொப்பரை விற்பனை முடிவுகளை எடுக்கும்படி பரிந்துரைக்கப் படுகின்றனர்.

**<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>:-**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி - 0422-2431405

**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-**

பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,

கோயம்புத்தூர்-*641003.*
தொலைபேசி - *0422-6611284*

மக்கள் தொடர்பு அலுவலர்